**Starting time 12.41 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 32/2015**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 07.03.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**: நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி புல எண்.177/2-ல் 3 ஏக். 89 செண்டில் நான்கெல்லைகள் குறிப்பிட்டு 2 ஏக்.81 செண்டுதான் கிரயமாக திருமாயி அம்மாள், ராமசாமி இருவரும் கிரயமாக பெற்றுள்ளார்கள் என்றால், ஆமாம். அதன் செக்குபந்தி விவரத்தில் வண்டிப்பாதைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த வண்டிப்பாதை தான் தென்வடலாக செல்லும் வண்டிப்பாதை என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் எத்தனை அடி அகலத்தில் அந்த வண்டிப்பைாதை செல்கிறது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம்.

2. நான் தாவாவில் 9 அடி அகலத்தில் 75.6 மீ நீளத்திலும் தென்வலாக வண்டிப்பாதை செல்வது சம்மந்தமாக எந்த வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். வா.சா.ஆ.8 ஆவணப்படி புல எண். 177/2 ஏ, 2 பி, 2 சி- க்கு கிழபுறத்தில் தென்வடலாக செல்லும பாதைக்கு கிழபுறத்தில் புல எண். 176 உள்ளது என்றால், ஆமாம். 03.09.1971 தேதியன்று முத்துசாமி கவுண்டருக்கு கருப்பண்ண கவுண்டர் எழுதிக் கொடுத்த ஆவணம் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால், சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறுகிறார். அந்த பத்திரத்தில் புல எண். 1772/-ல் 3.89 செண்டில் 93 செண்ட்

நான்கெல்லைகள் குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த செக்குபந்தி விவரத்தில் ஓடைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அதில் ஓடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அது **<u>பி.வா.சா.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. அதே தேதியன்று சின்னாக்கவுண்டருக்கு கருப்பண்ண கவுண்டர் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் என்றால், ஆமாம். அதே புல எண்ணில் 3 ஏக்.89 செண்டில் 8 செண்ட் நிலத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். அதன் செக்குபந்தி விவரத்திலும் ஓடைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அது **<u>பி.வா.சா.2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா வண்டிப்பாதைக்கு கிழபுறத்தில் உள்ள புல எண். 176 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால், ஆமாம்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 05.02.2001 தேதியன்று முத்துசாமி புல எண். 176/2-ல் 1 ஏக். 17 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றதற்கானது என்றால், ஆமாம். அதன் செக்குபந்தி விவரத்திலும் ஓடைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளத என்றால், ஆமாம். அது **<u>பி.வா.சா.3</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 29.11.1972 தேதியிட்ட ஆவணத்ததில் செட்டியம்மாளுக்கு குப்பண்ண கவுண்டர் மகன் பெரியசாமி கவுண்டர் எழுதிக் கொடுத்த ஆதார கடன் பத்திரம் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

5. நான் நிலம் வாங்கிய சமயத்திலிருந்தே தென்வடல் பாதையானது மலை வரையிலும் சென்று கொண்டிருந்தது என்றால் 9 அடியாக போய்கொண்டிருந்தது. 9 அடியாகத்தான் போய் கொண்டிருந்தது என்று வா.சா.ஆ 1-ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். நான் கிரயம் வாங்கிய தேதியிலிருந்தே இன்று வரையிலும் ஆணையர் பார்வையிட்ட போது எவ்வளவு அகலத்தில் இருந்ததோ இன்று வரையிலும் அதே அகலத்தில் தான் போய் கொண்டு இருக்கிறது என்றால், இல்லை.

6. வா.சா.ஆ-1-ல் புல எண்.177/2 ல் 2 ஏக். 81 செண்ட் நிலத்தை கிரயம் பெறும் போது தென்வடல் வண்டிப்பாதைக்கு மேற்கில் என்று குறிப்பிட்டுதான் கிரயம் பெறப்பட்டது என்றால், ஆமாம். வண்டிப்பாதையும் கிரயத்திற்கு உட்பட்டது என்று வா.சா.ஆ.1-ல் கூறப்படவில்லை

என்றால், ஆமாம். நான் தாவாவில் கூறியுள்ளவாறு 01.02.2015 தேதியன்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால், சரியல்ல, அன்றுதான் ஆளுங்களுடன் வந்து ஜே.சி.பி மூலம் 6 அடி இடத்தை அதிகமாக எடுத்தார்கள். என்னுடைய வழக்கில் எங்காவது பிரதிவாதிகள் 01.02.2015 தேதியன்று வந்து பாதையை 21 அடியாக அகலப்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

7. ஆக்கிரமிப்பு செய்த 6 அடியை மீண்டும் கொடுக்கவேண்டும் என செயலுறுத்துக்கட்டளை கேட்டுள்ளேனா என்றால், தடத்திற்கு மேற்கில் என்னுடைய நிலமான 2 ஏக் 81 செண்ட் நிலத்தை விட்டுவிடுமாறு தான் கேட்டுள்ளேன். என்னுடைய வழக்கில் அந்த 2 ஏக். 81 செண்ட் நிலத்தில் தான் தடம் செல்வதாக நான் கூறியுள்ளேன் என்றால், சொந்தமாக நான் வயலுக்கு செல்வதற்காக போட்டுள்ள தடம். அவ்வாறு நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால், ஆமாம்.

8. ஆணையர் பார்த்த போது இருந்த அதே அளவில் தான் நீண்ட காலமாக தாவா தடம் சென்று கொண்டிருக்கிறது என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலமாக தாவா சொத்தை பார்வையிட வேண்டி நான் மனு தாக்கல் செய்து அதன் பேரில் நீதிமன்ற ஆணையரும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் என்றால், ஆமாம். அது **நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எனது தரப்பில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

9. 01.02.2015 தேதியன்று பிரதிவாதிகள் யாரும் தாவா சொத்தில் நுழைந்து எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு செய்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும், தவறான வழக்கு மூலம் குறிப்பிட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. நான் தான் தாவா பாதையில் செடிகள் நட்டு இடையூறு ஏற்படுத்தினேன் என்றாலும், அதை தான் பிரதிவாதிகளும் மற்றவர்களும் அதைத்தான் அப்புறப்படுத்தினார்கள் என்றாலும், சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

**<u>10. வாதிகள் தரப்பு மறு விசாரணை</u>** எனக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால், 40 வயதாகிறது. 1971-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், ஆமாம். செக்குபந்தியில் ஓடையாக காட்டப்படும் ஓடை நிலத்தில் எப்போதும் இல்லை என்றால், ஆமாம். ஓடையின் புல எண் அந்த பத்திரங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால், ஆமாம். நீ.ம.சா.1 மற்றும் 2-ல் வண்டிப்பாதையில் புதியதாக மண் கொட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். அதனால் தான் நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால், ஆமாம்.

**<u>11. பிரதிவாதிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை</u>** நீ.மசா.ஆ.1 மற்றும் 2-ல் மண் கொட்டப்படாத வகையில் 15 அடி பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது பழைய பாதை. கிழமேல் பாதை 24, 29 அடி அகலத்தில் மேற்குபுறத்தில் செடி, கொடிகள் தான் எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அது எங்கேயும் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால், கல்கட்டையே அள்ளி எடுத்து சென்றுவிட்டதால் அது மண்ணாகத்தான் உள்ளது. வா.சா.ஆ.8-ல் 2 ஏக்கு கிழபுறத்தில் ஓடை செல்வதாக புள்ளிகள் வைத்து காட்டப்பட்டுள்ளது என்றால், இல்லை. அதேபோல 2 ஏக்கு வடபுறத்தில் பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால், இல்லை, தரிசாகத்தான் காட்டப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பு மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.15 P.M

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**